# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,147 — 1960 ජූනි 17 වැනි සිකුරාදා — 17.6.1960

12,147 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 27 | வரவு செலவுக் கூற்றுக்கள் ... .. | — |
| பதவிகள்–வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | — | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### வியாங்கொடை பட்டணச் சங்கம்

#### ஆடுமாடடிப்போர் சட்டம்

ஆடுமாடடிப்போர் சட்டத்தின் (அத்தியாயம் 201) 22 ஆம் பிரிவின்படி அதற்கான தக்க அதிகாரத்தாபனம், அதாவது வியாங்கொடை பட்டணச் சங்கம், உண்டாக்க, உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர், 1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி வெளியான 9,773 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரமான பிரகடனத்தால் திருத்தப் பட்ட அப்பிரிவு தம்மீது வைத்த தத்துவங்களின் பலத்தைக்கொண்டு உறுதிப்படுத்திய பிரமாணங்கள்.

வி. சி. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூன் மீ 2 ந் உ.

#### பிரமாணங்கள்

1. சட்டத்தின் 21 ஆம் பிரிவின்படி பிரகடனம் செய்யப்பட்ட ஆடுமாடடிக்கும் கொட்டில் வைத்திய சௌக்கிய உத்தியோகத்தரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும். அந்த உத்தியோகத்தரே அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் ஒழுக்க நெறிக்கும் சுகாதார நிலைமைகளுக்கும் பொறுப்பாளியாக இருத்தல் வேண்டும்.

2. (1) அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலில் எந்த மிருகத்தையும்—

(அ) வைத்திய சௌக்கிய உத்தியோகத்தரால் அதற்கென அதிகாரமளிக்கப்பெற்ற உத்தியோகத்தரால் அது சோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காகக் கொல்லுவதற்குத் தகுதியானதென்று, அங்கீகரிக்கப்பட்டாலன்றி ; அல்லது

(ஆ) காலை 6 மணிக்கும் 10 மணிக்குமிடையேயன்றி எவரும் கொல்லலாகாது. ஆயினும் தலைவர், எந்த விஷயத்திலும் இதில் சொல்லப்படும் நேரமல்லாத எந்த நேரத்திலும் எம்மிருகத்தையும் கொல்லுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

(2) அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலில் எந்த மிருகத்தையும்—

(அ) பந்தி (1) ன் படி அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 72 மணித்தியால நேரம் கழிந்த பின்னர் எச்சமயத்திலேனும் ; அல்லது

(ஆ) பந்தி (1) ன் படி அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஆடுமாடடிக்கும் கொட்டில் தலத்திலிருந்து அது உயிருடன் அப்புறப்படுத்தப் பட்டால், அது மீண்டும் அப்பந்தியின்படி சோதிக்கப்பட்டு, மனிதர் உண்பதற்காக கொல்லுவதற்குத் தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்டாலன்றி ஒருவரும் கொல்லலாகாது.

3. அந்த ஆடுமாடடிக்கும் கொட்டில் தலத்துக்குள் எந்த மிருகத்தையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அந்த மிருகம் அத்தலத்தில் நிற்கையில் அதற்குப் போதிய தீனி கிடைக்கச் செய்தற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும்.

4. அந்த ஆடுமாடடிக்கும் கொட்டில் தலத்துக்குள் எந்த மிருகத்தையும் கொண்டு வரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் கொல்லுவதற்குத் தகுதியற்றதென்று நிராகரிக்கப்பட்டால், அவ்விதம் அது நிராகரிக்கப்பட்ட உடனே அம்மிருகத்தை அத்தலத்திலிருந்து அப்புறப்படுத்தவேண்டும் அல்லது அப்புறப்படுத்துவிக்க வேண்டும்.

5. எந்த மிருகமும், 2 ஆம் பிரமாணத்தின்படி அது அங்கீகரிக்கப் பட்ட பின்னர் நோயுள்ளதாக அல்லது மனிதர் உண்பதற்காகக் கொல்லுவதற்குத் தகுதியற்றதாகக் காணப்படின் வைத்திய சுகாதார உத்தியோகத்தர் அல்லது 2 ஆம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தர் அம்மிருகம் கொல்லப்படுவதைத் தடை செய்யலாம்.

6. ஆடுமாடடிக்கும் கொட்டிலில் கொல்லப்பட்ட எம்மிருகத்தினதும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளது அல்லது மனிதர் உண்பதற்குத் தகுதியற்றது என்று வைத்திய சுகாதார உத்தியோகத்தராவது 2 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தராவது அபிப்பிராயப்பட்டால் அவர் அந்த இறைச்சியை அல்லது கழிவு இறைச்சியை உடனே அழித்துவிடும்படி அல்லது அந்த இறைச்சி அல்லது கழிவு இறைச்சி விற்பனைக்கு வைக்கப்படாமல் அல்லது மனிதர் உண்பதற்கு உபயோகிக்கப்படாமல் தடுக்கக்கூடியதாக ஒழித்துவிடும்படி செய்தல் வேண்டும்.

7. ஆடு மாடடிக்கும் கொட்டிலுக்குப் பொறுப்பாளியாயுள்ள உத்தியோகத்தர் மனிதர் உண்பதற்காக கொல்லுவதற்குத் தகுதியானதென்று அங்கீகரிக்கப்படாத அல்லது 5 ஆம் பிரமாணத்தில் சொல்லப் படுகின்றபடி தடைசெய்யப்பட்டிருக்கும் எந்த மிருகத்தையும் கொல்லவிடலாலாது.

8. (1) வைத்திய சௌக்கிய உத்தியோகத்தரின் அல்லது 2 ஆம் பிரமாணத்தில் சொல்லப்படும் உத்தியோகத்தரின் கட்டளையின் பேரிலன்றி 6 ஆம் பிரமாணப்படி மனிதர் உண்பதற்குத் தகுதியற்றதென்று அறிவிக்கப்பட்டிருக்கும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி எதையும் ஒருவரும் ஆடுமாடடிக்கும் கொட்டிலிலிருந்து அப்புறப்படுத்தலாகாது.

(2) மனிதர் உண்பதற்கான எந்த மிருகத்தினதும் சடலத்தை, அச்சடலத்தின் முன்தொடைகளிலும பின்தொடைகளிலும் அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குப் பொறுப்பாளியாயிருக்கும் உத்தியோகத்தர் " வியாங்கொடை பட்டணச் சங்கம் " என்று முத்திரை குத்தியிருந்தாலன்றி ஆடுமாடடிக்கும் கொட்டிலிலிருந்து ஒருவரும் அப்புறப்படுத்தலாகாது.

**9.** ஒரு மிருகம் வேறு எந்த மிருகத்தினதும் முன்னிலையிலாவது அல்லது அத்தலத்தில் அதற்கு முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைக்கப்பட்ட அத்தலம் சுத்தம் பண்ணப்படும் வரையிலாவது கொல்லப்படலாகாது.

**10.** ஒட்டுநோய், சருமநோய் அல்லது தொற்றுநோய் எதனாலும் வருந்தும் அல்லது சமீபகாலத்தில் வருந்திய அல்லது அத்தகைய நோயால் வருந்தும் எவருக்கும் சமீப காலத்தில் பணியாற்றிய எவரையும், நோய் தொற்றும் கால எல்லையும் காத்தற்கால எல்லையும் கழியும் வரை எந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள்ளும் பிரவேசிக்கவோ அல்லது எந்த மிருகத்தையும் கொல்லுவதில் பங்குபற்றவோ அந்த ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குப் பொறுப்பாளியாயிருப்பவர் அனுமதிக்கலாகாது.

**11.** (1) ஆடுமாடடிக்கும் கொட்டிலை உபயோகிப்பதற்கு கீழ்க்காணும் விகிதப்படியான ஒரு கட்டணம் சங்கத்துக்கு முதலில் கொடுக்கப்பட வேண்டும். கட்டணம் செலுத்தியமைக்குச் சான்ருக ஒரு உத்தியோக பூர்வமான பற்றுச்சீட்டு இல்லாமல் ஒரு மிருகத்தையும் கொல்ல அனுமதிக்கலாகாது :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| மாடுகளுக்கு, தலைக்கு .. .. | 1 | 0 |
| செம்மறியாடுகளுக்கு, வெள்ளாடுகளுக்கு அல்லது பன்றிகளுக்கு, தலைக்கு .. .. | 0 | 50 |

(2) ஒரு மிருகம் 2 ஆம் பிரமாணத்தின்படி மனிதர் உண்பதற்காகக் கொல்லுவதறகுத் தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்டிருக்குமிடத்து அம்மிருகத்தை ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குள் விடுவதற்கு முன்னர் கட்டணம் செலுத்தியமைக்குச் சான்ருக உத்தியோக பூர்வமான பற்றுச் சீட்டு ஒன்றைக் காட்ட வேண்டியது அவசியமன்று.

**12.** ஒரு ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குப் பொறுப்பாளியாயிருக்கும் ஒவ்வொருவரும் கீழ்க்காணும் மாதிரியில் ஆடுமாடடிக்கும் கொட்டிலுக்குக் கொண்டு செல்லப்படும் மிருகங்கள் அனைத்தினதும் இடாப்பொன்றை வைத்திருக்க வேண்டும் :—

| மாட்டின் பற்றுச்சீட்டு இலக்கம் | வர்ணனை | நிறம் | வயது | குறிசுட்ட அடையாளங்கள் | | ஆடுமாடடிப்பவர் பெயர் | தொழுவத்துக்குள் வந்த திகதியும் நேரமும் | சோதித்த திகதி | அற்புறப்படுத்திய திகதி | குறிப்புகள் | ஆடுமாடுகளைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தரின் முதலெழுத்துக் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வலப்பக்கம் | இடப்பக்கம் | | | | | | |
| | | | | | | | | | | | |

**13.** இப்பிரமாணங்களில்—

" தலைவர் " என்பது பட்டணச் சங்கத் தலைவர் எனப்பொருள்படும் ;

" சங்கம் " என்பது வியாங்கொடை பட்டணச் சங்கம் எனப் பொருள் படும் ;

" வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் " என்பது கம்பஹா வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் எனப் பொருள்படும்,

" சட்டம் " என்பது ஆடுமாடடிப்போர் சட்டம் (அத்தியாயம் 201) எனப் பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.